ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு'தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ உருகுமால் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ உருகுமால் ॥

ஆழ்வார் எம்பெருமானது சீரைத் துயரத்துடன் கூறுதல்

‡உருகுமால் நெஞ்சம்⋆ உயிரின் பரமன்றி⋆
 பெருகுமால் வேட்கையும்⋆ என் செய்கேன் தொண்டனேன்⋆
தெருவெல்லாம் காவி கமழ்⋆ திருக்காட்கரை⋆
 மருவிய மாயன் தன்⋆ மாயம் நினைதொறே (1)

நினைதொறும் சொல்லுந்தொறும்⋆ நெஞ்சிடிந்துகும்⋆
 வினைகொள் சீர் பாடிலும்⋆ வேம் எனதாருயிர்⋆
சுனைகொள் பூஞ்சோலைத்⋆ தென் காட்கரை என்னப்பா⋆
 நினைகிலேன் நான்⋆ உனக்காட்செய்யும் நீர்மையே (2)

நீர்மையால் நெஞ்சம்⋆ வஞ்சித்துப் புகுந்து⋆ என்னை
 ஈர்மைசெய்து⋆ என்னுயிராய் என்னுயிர் உண்டான்⋆
சீர் மல்கு சோலைத்⋆ தென் காட்கரை என்னப்பன்⋆
 கார் முகில் வண்ணன் தன்⋆ கள்வம் அறிகிலேன் (3)

அறிகிலேன் தன்னுள்⋆ அனைத்துலகம் நிற்க⋆
 நெறிமையால் தானும்⋆ அவற்றுள் நிற்கும் பிரான்⋆
வெறி கமழ் சோலைத்⋆ தென் காட்கரை என்னப்பன்⋆
 சிறியவென்னாருயிர் உண்ட⋆ திருவருளே (4)

திருவருள் செய்பவன் போல⋆ என்னுள் புகுந்து⋆
 உருவமும் ஆருயிரும்⋆ உடனே உண்டான்⋆
திருவளர் சோலைத்⋆ தென் காட்கரை என்னப்பன்⋆
 கரு வளர் மேனி⋆ நம் கண்ணன் கள்வங்களே (5)

என் கண்ணன் கள்வம்⋆ எனக்குச் செம்மாய் நிற்கும்⋆
 அங்கண்ணன் உண்ட⋆ என்னாருயிர்க்கோதிது⋆
புன் கண்மை எய்திப்⋆ புலம்பி இராப்பகல்⋆
 என் கண்ணன் என்று⋆ அவன் காட்கரை ஏத்துமே (6)

www.prapatti.com

காட்கரை ஏத்தும்⋆ அதனுள் கண்ணா என்னும்⋆
வேட்கை நோய் கூர⋆ நினைந்து கரைந்துகும்⋆
ஆட்கொள்வான் ஒத்து⋆ என்னுயிர் உண்ட மாயனால்⋆
கோள் குறைபட்டது⋆ என்னாருயிர் கோள் உண்டே (7)

கோள் உண்டான் அன்றி வந்து⋆ என்னுயிர் தான் உண்டான்⋆
நாளு நாள் வந்து⋆ என்னை முற்றவும் தான் உண்டான்⋆
காள நீர் மேகத்⋆ தென் காட்கரை என்னப்பற்கு⋆
ஆள் அன்றே பட்டது⋆ என்னாருயிர் பட்டதே (8)

ஆருயிர் பட்டது⋆ எனதுயிர் பட்டது⋆
பேர் இதழ்த் தாமரைக் கண்⋆ கனி வாயதோர்⋆
கார் எழில் மேகத்⋆ தென் காட்கரை கோயில் கொள்
சீர் எழில் நால் தடந்தோள்⋆ தெய்வ வாரிக்கே (9)

வாரிக்கொண்டு⋆ உன்னை விழுங்குவன் காணில் என்று⋆
ஆர்வுற்ற என்னை ஒழிய⋆ என்னின் முன்னம்
பாரித்து⋆ தான் என்னை⋆ முற்றப் பருகினான்⋆
கார் ஒக்கும்⋆ காட்கரையப்பன் கடியனே (10)

‡கடியனாய்க்⋆ கஞ்சனைக் கொன்ற பிரான் தன்னை⋆
கொடி மதிள் தென் குருகூர்ச்⋆ சடகோபன் சொல்⋆
வடிவமையாயிரத்து⋆ இப்பத்தினால் சன்மம்
முடிவெய்தி⋆ நாசம் கண்டீர்கள்⋆ எங்கானலே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com